# அரையாண்டுத் தேர்வு - 2024

10-ஆம் வகுப்பு

## தமிழ்

பதிவு எண்

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

குறிப்புகள் :

- மாணவர்கள் தேர்வு நேரத்தை முழுமையாகப் பயன்படுத்தி விடைகளை எழுத்துப்பிழைகள் மற்றும் அடித்தல் திருத்தலின்றி தெளிவாகவும், நேர்த்தியாகவும் எழுதுதல் வேண்டும்.
- விடைகள் பொருள் மாறாமல் மாணவர்களது சொந்த நடையில் இருத்தல் வேண்டும்.
- தேர்வெழுத நீலம் மற்றும் கருப்பு நிற மையினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

15 X 1 = 15

1. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ......
அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

2. எந்தமிழ்நா – பிரித்தால் இவ்வாறு வரும்.
அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

3. வந்தான் - என்பது எவ்வகை வினைமுற்று?
அ) தன்மை வினைமுற்று ஆ) முன்னிலை வினைமுற்று
இ) படர்க்கை வினைமுற்று ஈ) ஏவல் வினைமுற்று

4. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

5. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி ...........
அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
ஆ) காப்பிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
இ) பக்தி இலக்கிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

6. கூற்று : 1. காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.
கூற்று : 2. உவமைக்கும் பொருளுக்கும் இடையில் உவம உருபு மறைந்து வருவது உம்மைத்தொகை.
அ) கூற்று 1 மட்டும் சரி ஆ) கூற்று 1, 2, ஆகியன சரி
இ) கூற்று 2 மட்டும் சரி ஈ) கூற்று 1, 2 ஆகியன தவறு

7. முல்லை நிலத்தெய்வம் ........
அ) முருகன் ஆ) திருமால் இ) வருணன் ஈ) இந்திரன்

8. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே .......
அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

9. அமெரிக்காவின் ............... தமிழ்ச் சங்கம் வாழையிலை விருந்து விழாவைக் கொண்டாடி வருகிறது.
அ) கான்டன் ஆ) மினசோட்டா இ) டூவன்செள ஈ) கோலாலம்பூர்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

10. கண்ணதாசன் .......... புதினத்திற்காகச் சாகித்திய அகாடமி விருது பெற்றார்.

அ) சேரமான் காதலி ஆ) விசாரணை கமிஷன் இ) அன்பளிப்பு ஈ) வேருக்கு நீர்

11. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது ..............

அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்

இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி,
கன்று எரிஒள்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி,
அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரியம் எனினே

12. இப்பாடலை எழுதியவர் ..............

அ) நப்பூதனார் ஆ) நல்லாதனார் இ) கீரந்தையார் ஈ) பெருங்கௌசிகனார்

13. பாடல் இடம் பெற்றுள்ள நூல் ................

அ) மலைபடுகடாம் ஆ) பரிபாடல் இ) முல்லைப்பாட்டு ஈ) மதுரைக்காஞ்சி

14. இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள குறுநில மன்னன் ..............

அ) அதியமான் ஆ) பேகன் இ) நன்னன் ஈ) பாரி

15. 'வயிரியம்' என்பதன் பொருள் .............

அ) சுற்றம் ஆ) கூத்தர் இ) பள்ளம் ஈ) சோறு

## பகுதி - II பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
(21 - ஆம் வினாவுக்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்) 4 X 2 = 8

16. அ) புயல்களுக்குப் பெயர் வைக்கும் நடைமுறை 2000 ஆம் ஆண்டு தொடங்கியது.

ஆ) பிள்ளைத்தமிழ் ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இரு வகைப்படும்.

17. சங்க கால மன்னர்களின் அறநெறி ஆட்சிக்கு, அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டவை எவை?

18. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

19. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.

20. மருத்துவத்திலும் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

21. 'தரும்' - என முடியும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.

## பிரிவு- 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5 X 2 = 10

22. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.

அ) சிறு - சீறு ஆ) கொடு - கோடு

23. கீழ்க்காணும் சொற்களின் கூட்டப் பெயர்களை எழுதுக.

*(கொத்து, குவியல், தாறு, மந்தை)*

அ) கல் -

ஆ) வாழை -

இ) ஆடு -

ஈ) அவரை -

24. உரைத்த - பகுபத உறுப்பிலக்கணம் தருக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

25. கண்ணே கண்ணுறங்கு! ........
காலையில் நீயெழும்பு! ..........
மாமழை பெய்கையிலே! .......
மாம்பூவே கண்ணுறங்கு! ....... - இப்பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

25. கலைச்சொல் அறிவோம்.
அ) Consonent ஆ) Humanism

26. தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.
அ) ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது. *(தனிச் சொற்றொடர்களாக மாற்றுக.)*
ஆ) அழைப்பு மணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தாள்.
*(கலவைச் சொற்றொடராக மாற்றுக)*

27. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக.
அ) திருச்சிராப்பள்ளி ஆ) திருநெல்வேலி இ) தஞ்சாவூர் ஈ) புதுக்கோட்டை

28. பாடாண் திணையை விளக்குக.

## பகுதி - III பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2 X 3 = 6

29. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப்படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

30. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல், ஒரு உரையாடல் அமைக்க.

31. பத்தியைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.
அறம் கூறு அவையம் பற்றி 'அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு. உறையூரிலிருந்த அறஅவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது.
அ) மதுரையில் இருந்த அவையத்தின் சிறப்பு யாது?
ஆ) அவையம் பற்றி புறநானூறு குறிப்பிடுவது யாது?
இ) தனிச்சிறப்பு பெற்ற அறஅவையம் எங்குள்ளது?

## பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். (34 - ஆவது வினாவுக்குக் கட்டாயமாக விடையளிக்கவும்) 2 X 3 =6

32. காசிக்காண்டம் குறிப்பிடும் விருந்தோம்பல் முறைகளில், எவையேனும் மூன்று இல்லற ஒழுக்கங்களை எழுதுக.

33. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

34. அடி பிறழாமல் எழுதுக.
அ) "மாற்றம் எனது ........ " எனத் தொடங்கும் கண்ணதாசனின் காலக்கணிதம் பாடல்.
ஆ) "அன்னை மொழியே ........... "என்று தொடங்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பாடல்.

## பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2 X 3 = 6

35. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

36. கவிஞர் தான் கூற விரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

37. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர் - அலகிட்டு வாய்பாடு எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 X 5 = 25

38. அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை, இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக. (அல்லது)

ஆ) வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

39. அ) திறன் பேசியினால் ஏற்படும் நன்மைகளையும் தீமைகளையும் விளக்கி நண்பனுக்குக் கடிதம் எழுதுக. (அல்லது)

ஆ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால், இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. தேர்வர் தங்களைத் தமிழரசியாகப் பாவித்து மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

42. அ) இன்சொற்களைப் பேசுவதனால் விளையும் நன்மைகளையும் தீய சொற்களைப் பேசுவதால் விளையும் தீமைகளையும் விளக்கி, நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது? என விளக்குக. (அல்லது)

ஆ) மொழிபெயர்க்க.

1. Education is what remains after one has forgotten what one has learned is school - **Albert Einstein**.
2. Tomorrow is often the busiest day of the Week - **Spanish Proverb**
3. It is during our darkest moment that we must focus to see the light - **Aristotle**
4. Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts - **Winston Churchill**.

## பகுதி - V

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3 X 8 = 24

43. அ) போராட்டக் கலைஞர் - பேச்சுக் கலைஞர் -நாடகக் கலைஞர் - திரைக்கலைஞர் - இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.

(அல்லது)

ஆ) தமிழ்ச்சொல் வளம் பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

44. அ) `கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றி வேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றி உங்களின் கருத்துகளை விவரிக்க. (அல்லது)

ஆ) அழகிரி சாமியின் "ஒருவன் இருக்கிறான்" கதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக.

முன்னுரை - சாலைப் பாதுகாப்பு உயிர்ப் பாதுகாப்பு - சாலை விதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துகளைத் தவிர்ப்போம், விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை. (அல்லது)

ஆ) `விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.



S. NAVITH. M.Sc. M.Ed
PG. Asst.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com